பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை 26.10.2025 கதிர் 350

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுத் தலைவர் சிறீதரன் மீதான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தி

☞ 2

# போதைப் பொருள் ஒழிப்பு அடுத்த வாரம் தொடக்கம்

போதைப்பொருள் ஒழிப்பு தேசியவேலைத்திட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை தொடங்கப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டமானது, 'தேச ஒருமைப்பாடு - தேசிய இயக்கம்' என்றதொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளதோடு அங்குராப்பணநிகழ்வு காலை 10 மணிக்கு சுகததாச மைதானத்தில் நடைபெறவுள்ளது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

போதைப்பொருள்துஸ்பிரயோகம் குறித்த தேசிய சபை, மாவட்ட சபைகள், பிராந்திய சபைகள், மற்றும் பொதுப்பாதுகாப்புக் குழுக்கள் ஆகிய நான்கு முக்கியதுறைகள் ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு ஒன்றிணையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொலிஸாரின் தரவுகளின்பிரகாரம், கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் 1,482 கிலோ 820 கிராம் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, 59,243 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

☞ 2

## உள்நாட்டு தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

உள்நாட்டுத் கைத்தொழில்களை பலப்படுத்தி, உலகச் சந்தையில் நுழைவதற்கு ஆளும்தரப்பும் தனியார் துறையும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். உள்நாட்டு தொழில்முனைவோரை மேம்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி தெரிவித்தார்.

கொழும்பு சினமன் லைஃப் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற '2025 கைத்தொழில் மற்றும் சேவை மதிப்பீட்டு விருது விழா'வில் உரையாற்றுகையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைதேசியகைத்தொழில்சம்மேளனத்தினால் (Ceylon National Chamber of Industries - CNCI) கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இந்த விருது விழாவின் நோக்கம், இலங்கையின் கைத்தொழில்துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை இனங்கண்டு அவற்றை ஊக்குவிப்பதாகும்.

நிகழ்வில் பேசிய பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் கைத்தொழில்துறையை பலப்படுத்துவதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், இறக்குமதிகளைக் குறைத்தல் மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றிற்கு நேரடியான பங்களிப்புக்கிடைக்கின்றது.

கைத்தொழில்துறையின் கொள்ளளவு அபிவிருத்தி, புத்தாக்கங்களை ஊக்குவித்தல், விரிவாக்கத்தை இலகுபடுத்துதல் மற்றும் புதிய சந்தைகளுக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு

☞ 2

# எதிர்க் கட்சியினருக்கு பாதுகாப்பு வழங்காதது தவறானதொரு முடிவு

### ஆளும்தரப்பைச் சாடுகின்ற அஜித் பி பெரேரா

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது என்பது ஆளும்தரப்பின் தவறான கொள்கையாகும். பொலிஸாரும் ஆளும்தரப்பின் கொள்கைக்கு ஏற்ப செயற்படுவது பெரும்பிரச்சினையாகும். ஜகத் விதானகேவுக்கு மாத்திரமின்றி எந்தவொரு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தற்போது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என அஜித் பி பெரேரா குற்றஞ் சுமத்தினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞ 3

## சுனாமி தயார் நிலைக்கு நவம்பர் 5இல் ஒத்திகை

நாட்டின் அனைத்துப்பகுதிகளையும் உள்ளடக்கிய சுனாமி தயார்நிலை ஒத்திகையை நவம்பர் 5 நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட தெரிவித்துள்ளார்.

சுனாமி தயார்நிலை குறித்து முப்படையினர், பொலிஸ், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணைந்துகொண்ட போதே பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும்

### மின்சாரத்துறை மறுசீரமைப்பு பணிப்பாளரின் பதவி நீடிப்பு;

# அமைச்சு செயலாளரின் தீர்மானத்தை உடன் நிறுத்திய மின் சக்தி அமைச்சர்

மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சேவைக் காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு வலுசக்தி அமைச்சின் செயலாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி உடனடியாக அமுலாகும் வகையில் நிறுத்துமாறு பணித்துள்ளார்.

மின்சாரத்துறை மறுசீரமைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் நிரோஷனின் பதவிக்காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, ஒக்டோபர் 15 வலுச்சக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபாலவால் அவருக்கு கடிதம்

☞ 2

## மணற்காட்டில் 600 ஏக்கர் காணியை அபகரிக்கும் முயற்சியை கைவிடுக

### கிராம மக்கள் கோரிக்கை

யாழ். வடமராட்சி கிழக்கு, மணற்காடு பகுதியில் 600 ஏக்கர் காணிகளை சுற்றுலா மேம்பாடு எனும் போர்வையில் அபகரிக்கும் முயற்சியை கைவிடுமாறு மணற்காடு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மணக்காடு கிராம மட்ட அமைப்புகள் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞ 2

# பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் தொடரத் தகுதியற்றவர்

### முன்னாள் எம்.பி. தொலவத்த சீற்றம்

நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சிகளுக்கு பெரும் பொறுப்பு இருக்கின்றது.. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கெதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை முன்வைக்க வேண்டும். மக்களின் உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்த தவறிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அந்த பதவியை வகிக்கத் தகுதியற்றவரென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஆளும்தரப்புக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டுள்ள அரசியல்வாதிகளின் உயிருக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குக் கொலைஅச்சுறுத்தல் விடுக்கப்படுவது மாத்திரமின்றி,

☞ 2

# துப்பாக்கிச் சூடுகளைக் கட்டுப்படுத்த ஆளும்தரப்பிடம் திட்டங்கள் இல்லை

### சஜித் பிரேமதாச காட்டம்

நாட்டில் எந்த சந்தர்ப்பத்தில் எங்கு துப்பாக்கிச்சூடு நடக்கும் என்பதை ஊகிக்க முடியாமலுள்ளது. இந்த நிச்சயமற்ற நிலை மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஆளும்தரப்பிடம் முறையான வேலைத்திட்டங்கள் எவையும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டம், இறக்குவானைத் தேர்தல் தொகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களை வாழ வைப்பதுதான் ஓர் ஆளும்தரப்பின் கொள்கையாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இன்று நாட்டில் கொலைக் கலாச்சாரம் தலைதூக்கியுள்ளது. இவ்வாண்டில்

☞ 2

## இனி இது .....

நாடாளுமன்றத்தில் சாமர சம்பத் முன்வைத்த கோரிக்கை தொடர்பாக இந்தப் பத்தியில் நேற்றுச் சுட்டிக்காட்டியிருந்தேன். இந்தப் பிரச்சினை தொடர்பில் அவரது ஊடகம் ஒன்றுக்குஅவர்நேர்காணல்வழங்கியிருந்தார். சிறீதரனுக்கு நெருக்கமானவர்களால் உருவாக்கப்பட்டு பின்னர் புலம்பெயர் தமிழ் பெரு முதலாளிக்கு விற்கப்பட்ட அந்த ஊடகத்திற் வழங்கிய நேர்காணலில் வழக்கம் போல இந்த விடயத்திலும் தனது கட்சியினரே தனக்கெதிராகச் சதி செய்திருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார் சிறீதரன்.

நாடாளுமன்றத்தில் சாமர சம்பத் தனது கோரிக்கையை முன்வைத்தபோது அதனை சபாநாயகர் நிராகரித்த நிலையில், தனது கட்சிக்காரரே எழுந்து அவர் பேசுவதற்கு வாய்ப்பளிக்கவேண்டும்என்றுசபாநாயகரிடம் வலியுறுத்தினார் என்பதைச் சுட்டிக்காட்டிய சிறீதரன், கட்சியின் தலைமைப் பதவியில் தான் அமரக்கூடாது என்று யார் பின்னணியில் இருந்து செயற்பட்டார்களோ அவர்களே இந்தச் சதியின் பின்னாலும் இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்.

அந்தப் பின்னால் உள்ளவர் சுமந்திரன்தானே என்று நெறியாளர் எடுத்துக்கொடுக்க இருக்கலாம் என்கிறார் சிறீதரனும். இணையப் பத்திரிகை ஒன்று ஏற்கனவே வெளியிட்ட விடயங்களே சமார சம்பத்தின் கடிதத்தில் இருந்தன என்பதையும் சாமர சம்பத்தின் கடிதம் பற்றிய செய்திகள் வெளியான உடனேயே சமூக ஊடகங்களில் இதற்கும் சுமந்திரன் மீதுதான் சிறீதரன் குற்றஞ்சாட்டுவார் என்று பலரும் கருத்துத் தெரிவித்ததையும் சுட்டிக்காட்டி இந்தப் பின்னணியில் சுமந்திரன் அணியினரின் கை இருப்பதாக அவர் கூற முயற்சித்தார்.

அதுவும்போகஅரசமைப்புச்சபையில்தான் சுயாதீனமானவன் என்றும் கட்சியைக் கேட்டு கேட்டு ஒவ்வொன்றையும் செய்யவேண்டிய கட்டப்பாடு தனக்கு இல்லை என்றும் தெரிவித்தார். ஆனால், இது விடயத்தில் தன் மீதுவைக்கப்பட்ட இருகுற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிப்பதை அவர் புத்திசாலித்தனமாகத் தவிர்த்துவிட்டார். ஏனெனில் அரசமைப்புச் சபையில்அவர்எடுத்த முடிவுகள்எதிர்காலத்தில் தமிழ் மக்களையே அதிகம் பாதிப்பனவாக அமையும் என்ற காரணத்தாலேயே தமிழ் அரசுக் கட்சிக்குள்ளேயே சிறீதரனுக்கு எதிர்ப்பு எழுந்திருந்தது. லஞ்சம், ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்யும் விடயத்தில் ஆளும்தரப்புக்கு ஆதரவாக தவறானவரைத் தெரிவு செய்வதற்கு சிறீதரன் ஆதரவளித்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது, இது போன்ற முக்கிய விடயங்களில் இனிமேல் கட்சியின் முடிவைக் கேட்டே சிறீதரன் முடிவெடுக்கவேண்டும் என்று கிழக்கில் நடந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டம் ஒன்றில் அறிவுறுத்தப்பட்டதாகவும் ஞாபகம். ஆனாலும் நான் சுயாதீனமானவன் கட்சிக்கெல்லாம் கட்டுப்பட்டு நடக்கமாட்டேன் என்கிற ரீதியில் சிறீதரனின் நேர்காணல் அமைந்திருந்தது. கட்சிக்குக் கட்டுப்படமாட்டீர்கள் என்பது சரி, அது உங்கள் உட்கட்சி விவகாரம், ஆனால், உங்கள் முடிவுகள் தமிழ் மக்களைப் பாதிக்கும் நிலையில் அதனை ஏன் எடுத்தீர்கள் என்பதைத் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய கடப்பாடு இருக்கிறதல்லவா? காணாமலாக்கப் பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் பணியகத்தின் உறுப்பினர்களாக படை அதிகாரிகளை நியமிப்பதை ஆளும்தரப்போடு சேர்ந்து எப்படி ஆதரித்தார் எனபதற்கும், இலஞ்சஊழல்ஆணைக்குழுவின்தலைமைப் பதவிக்கு முக்கிய நியமன விதிகளை மீறி ஆளும்தரப்பு ஒருவரை நியமனம் செய்யும்போது ஆளும்தரப்பின் முடிவை ஆதரிக்க வேண்டிய அவசியம், தேவை என்ன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கிறது. அதை சுமந்திரனுடனான உட்கட்சி அரசியல் பிணக்குக்குள் கொண்டு சென்று மறைப்பது அரசியல் தலைமைத்துவம் அல்ல. அது வெறும் பித்தலாட்டம்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## போதைப் பொருள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், 2,542 கிலோ 454 கிராம் ஐஸ் கைப்பற்றப்பட்டுள்ளதோடு 67,762 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 582 கிலோ 136 கிராம் ஹஷிஷ் பறிமுதல் செய்யப்பட்டு 1,444 கைதுகளும் இடம்பெற்றுள்ளன.

14,434 கிலோ 468 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு 59,482 கைதுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் 32 கிலோ 642 கிராம் கொகைன் கைப்பற்றப்பட்டுள்ளதோடு 86 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 39,617 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதோடு அவற்றை விநியோகித்த 2,921 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பொது மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதாள உலகக் குழுக்களுடனும் அவர்கள் தொடர்புபடுத்தப்படுகின்றனர்.

வெலிக பிரதேசசபைத்தலைவர் கொல்லப் பட்ட பின்னரும் அவரைப் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புபடுத்தி அமைச்சரவை அமைச்சரொருவர் அவமதிப்பிற்கு உட்படுத்துகின்றார். இவ்வாறான பழிகளைச் சுமத்தி அவர் கொல்லப்பட்டமையை நியாயப்படுத்த முற்படுகின்றனர். தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதாரனவுக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்பிரதிநிதிகளின்பாதுகாப்புவிவகாரத்தில் ஆளும்தரப்பு ஏன் இவ்வாறு அசமந்த போக்குடன்செயற்படுகிறது? எதிர்க்கட்சியினரை ஒட்டுமொத்தமாக இல்லாதொழித்து தனி அரசியல்கட்சிஆட்சியைநிலைநிறுத்துவதுதான் ஆளும்தரப்பின் இலக்கா?

நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சிகளுக்கு பெரும் பொறுப்பு இருக்கின்றது. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கெதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை முன்வைக்கவேண்டும். அவர் அமைச்சரவை அமைச்சராவார்.

அவ்வாறிருக்கையில் நபரொருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தால் அவர் பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர் எனக் கூறுவதற்கு அமைச்சருக்கு தார்மீக உரிமை கிடையாது. நாட்டு மக்கள் ஒவ்வொருவரதும் உயிர் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்த வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும்.

பாதாளஉலகக்குழுக்களுடன்தொடர்புடைய வர்களுக்கு உயிர் வாழ்வதற்கான உரிமை இல்லை என்றால், கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் எதற்காக அதியுயர் பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர்? நாட்டில்நடைமுறையிலுள்ள சட்ட பொறிமுறைக்கமையவே எந்தவொரு நபரையும் தண்டனைக்குட்படுத்த முடியும். தண்டனைசட்டக்கோவையின்கீழ்கொலைத தண்டனை எவ்வாறு அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ள போதிலும், எமது நாட்டில் கொள்கை ரீதியில் கொலைத் தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை.

கொலைத் தண்டனை விதிக்கப்பட்டாலும் அதனை அமுல்படுத்தாத மனித நேயமுடைய நாட்டில், எவரையும் சுட்டுக் கொல்வதற்கு யாருக்கும் உரிமை இல்லை. நாட்டில் நடைமுறையிலுள்ளசட்டமேஅனைவருக்கும் மேலானதாகும். தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஆளும்தரப்பு இன்னும் பொறுப்புடனும் அக்கறையுடனும் செயற்படவேண்டும்.

பொலிஸ்மா அதிபரை அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டு அவர் மீது அழுத்தம் கொடுக்காமல், அவருக்கு சுயாதீனமாக செயற்பட இடமளிக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம்.

ஆளுந்தரப்பினர் மீது சமூக வலைத்தளங்களில்அவதூறுபரப்புபவர்களை தேடிக் கைது செய்வதற்காகவே இன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் காணப்படுகிறது. குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பு அதுவல்ல. இன்று குற்றவியல் சட்டம் சிவில் சட்டமாகியுள்ளது. சமூக வலைத்தளத்தில் அவதூறு பரப்புவது குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படக்கூடிய தவறல்ல. பொலிஸ் சேவையில் காணப்படும் அரசியல் தலையீடுமுற்றுமுழுதாகநீக்கப்படவேண்டும்.

அத்தோடு நாட்டு பிரஜைகளின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன் என்றார்.

## துப்பாக்கிச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரம் அதிக எண்ணிக்கையிலான துப்பாக்கிச்சூடுசம்பவங்கள்பதிவாகியுள்ளதால், உயிரிழப்புகளும் காயங்களுக்குள்ளான சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன.

பொது மக்கள் சந்திப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பிரதேசசபைத் தவிசாளர்ஒருவர்துப்பாக்கிச்சூட்டுக்குஇலக்காகி உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு சேவையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தில் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் மக்களின் உயிருக்கு எவ்வாறு உத்தரவாதமளிக்க முடியும்?

இன்று சமூகத்தில் கொலைகளும் திட்டமிட்ட குற்றச்செயல்களும் வெகுவாகவும் சர்வசாதாரணமாக இடம்பெற்று வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் சரியான வேலைத்திட்டமொன்று இல்லை. இந்த ஆளும்தரப்பின் பலவீனம் காரணமாக, கொலைகாரர்களுக்கும்கொள்ளையர்களுக்கும் குற்றங்களைச் செய்வதற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தான்கொலைசெய்யப்படுவதற்கு முன்னர் வெலிகம பிரதேசசபைத் தலைவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், எனவே தனக்கு பாதுகாப்பு வழங்குமாறும் பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரிக்கைவிடுத்துள்ளார். ஆனால்பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸார் அதற்குரிய எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இன்று நாட்டில் எந்த சந்தர்ப்பத்தில் எங்கு துப்பாக்கிச்சூடு நடக்கும் என்பதை ஊகிக்க முடியாமலுள்ளது. இந்த நிச்சயமற்ற நிலை மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்களையும், கொலைகாரர்களையும் கைது செய்து, குற்றச் செயல்களை இல்லாதொழிக்க வேண்டும். அற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

அவர்களுக்கு சட்டத்தின் கீழ் அதிகபட்ச தண்டனைவழங்கும்நடவடிக்கைக்குநாமும் எமது ஆதரவைத்தருவோம். இந்தக்கொலைக் கலாசாரத்தை முன்னிறுத்தி, எதிர்க்கட்சியை கட்டுப்படுத்த வந்தால், அதற்கு நாம் இடமளியோம். இன்றுநாட்டில்ஜனநாயகமோ அமைதியோ இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. நாட்டை அழிக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

நீதி, நியாயம், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கும் நாம் எமது உட்சபட்ச ஒத்துழைப்பத் தருவோம். மக்களுக்கு சேவையாற்றுவதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு முறையான பாதுகாப்பை பெற்றுக் கொடுக்குமாறும், 220 இலட்சம் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

## மணற்காட்டில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்கோவளத்திற்கும் மணற்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும், மணற்காட்டுக்கும் பொற்பதி கிராமத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும் சுற்றுலா தேவைகளுக்காக அபகரிக்கப்பட உள்ளன. இதனை உடனடியாக கைவிட வேண்டும்.

மணக்காடு கிராமத்திலுள்ள மக்கள் பலருக்கு குடியிருக்க காணியில்லாத நிலையில். தனியார்களுக்கு இவ்வாறு காணிகளைவழங்கும்முயற்சிஏற்றுக்கொள்ள முடியாது. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம்.

எனவே சம்மந்தப்பட்ட தரப்புகள் உரிய கவனமெடுத்துகுறித்த600ஏக்கர்காணிகளை அபகரிக்கும் நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும் என்றனர்.

## உள்நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

பலமான போட்டித்தன்மைமிக்க கைத்தொழில்தளம்என்பதுபொருளாதாரரீதியில்கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு முன்னுரிமை மட்டுமல்ல, அது ஒரு தேசியத் தேவையாகும்.

நிதி, தொழில்நுட்பம் மற்றும் ஆற்றல் அபிவிருத்திக்கான வழிகளை விரிவுபடுத்தி கைத்தொழில் அபிவிருத்திக்குச் சாதகமான சூழலை உருவாக்குவதற்கு ஆளும்தரப்பு பொறுப்புடன் செயற்படும்.கைத்தொழில் துறையில் பெண்களுக்கு சம வாய்ப்புகளை வழங்குதலை நியாயமான பொருளாதார உத்தியாகவும் பயன்படுத்தப்படலாம்.

உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களின் வெற்றிமூலம்எமதுதேசியப்பொருளாதாரத்தின் அத்திவாரம் வலுப்பெறுகிறது. உற்பத்தி,முகாமைத்துவம், புத்தாக்கம் மற்றும் திட்டமிடல் ஆகியவற்றில் பெண்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய போதிலும்,அவர்களின்பங்களிப்புபெரும்பாலும் சரியாக இனங்காணப்படுவதில்லை.

ஊழியர்கள், முகாமையாளர்கள் அல்லது தொழில்முயற்சியாளர்கள் என பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பதன் மூலம், உற்பத்தித்திறன் மற்றும் புத்தாக்கம் மூலம் ஒட்டுமொத்த கைத்தொழில் சூழலியல் அமைப்பையும் பலப்படுத்த உதவுகின்றது.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் கீழ், கொள்கைகள், சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவன ரீதியான ஒத்துழைப்புக்கள் மூலம் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பை மேம்படுத்துவதற்குநடவடிக்கைஎடுக்கப்படும். துரிதக் கடன் வசதி மற்றும் நிதிச் சேவைகள், தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி, சமமான சேவைக்குச் சமமான ஊதியம் வழங்குதல்,பெண்களைமையமாகக்கொண்ட தொழில்முயற்சிகளுக்குஆதரவளித்தல்ஆகிய விடயங்களில் ஆளும்தரப்பு தலையிடும்.

தொழிலாளர் படையில் பெண்களின் பங்கேற்பைக் கட்டுப்படுத்தும் ஊதியம் வழங்கப்படாத பராமரிப்பு போன்ற தடைகளை நீக்குவதற்கும், பரந்த மேம்பாட்டிற்காக பால்நிலைக்குப் பதிலளிக்கும் கைத்தொழில் கொள்கைகளை வலுப்படுத்துவதற்கும் ஆளும்தரப்பு உறுதிபூண்டுள்ளது. தேசிய அபிவிருத்தியில்தொழில்முயற்சியாளர்களின் பங்கை நாம் பாராட்ட வேண்டும். அவர்களின் படைப்பாற்றலும் உறுதிப்பாடும் பொருளாதார முன்னேற்றத்தின் அத்தியாவசிய காரணிகளாகும் என்றார்.

## அமைச்சு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபாலவால் அனுப்பப்பட்ட கடிதத்தில், மின்சாரத்துறைமறுசீரமைப்புச்செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்த அவரது பதவிக் காலம் 2026 ஜூன் 26 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக நிரோஷனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி அனுமதி வழங்கியுள்ளார் எனவும் செயலாளர் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதம் வழங்கப்பட்ட ஒரே வாரத்தில் அமைச்சரிடமிருந்து அமைச்சின் செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி பதவி நீடிப்பை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. குறித்த பதவி நீடிப்பிற்குத் தாம் எந்த வகையிலும் அங்கீகாரம் வழங்கவில்லை என்றும் அமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய நீட்டிப்பிற்கு அங்கீகாரம் கோருவதும் ஒரு தவறான முன்வைப்பாகும் என்றும்அமைச்சர்தனதுகடிதத்தில்அமைச்சின் செயலாளருக்குத் தெரிவித்துள்ளார். எனவே ஒக்டோபர் 15 அனுப்பப்பட்ட கடிதம் உட்பட பணிப்பாளர் நாயகத்தின் பதவி நீடிப்புத் தொடர்பாக அமைச்சின் செயலாளரால் எடுக்கப்பட்ட அனைத்துநடவடிக்கைகளையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மீளப் பெறுமாறு வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

## எதிர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு உண்மையிலேயே உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாரால் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு மதிப்பாய்வு அறிக்கையும் காணப்படுகிறது. அதிலும் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் பொலிஸாரால் அவரது பாதுகாப்பு உரிய முறையில் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆளும்தரப்புக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவர்களின் உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போவதில்லை என்பதே ஆளும்தரப்பின் கொள்கையாகவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகேவின் பாதுகாப்பிற்கு பொலிஸ்மா அதிபர் பொறுப்பு கூற வேண்டும். பொலிஸ் மதிப்பாய்வுஅறிக்கைகிடைக்கப்பெற்றிருந்தும், அது தொடர்பில் ஜகத் விதானகேவுக்கு தனிப்பட்டரீதியிலேனும்தெரியப்படுத்துவதற்கு ஒரு மாதம் கடந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எந்த நபரால், எந்த குழுவால் அவருக்கு அச்சுறுத்தல் காணப்படுகிறது என்பது அந்த அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவருக்கு மாத்திரமின்றி தற்போது எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பாதுகாப்பு இல்லை. ஆனால் அமைச்சர்கள் , ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னரைவிடப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது என்பது ஆளும்தரப்பின் தவறான கொள்கையாகும். பொலிஸாரும் ஆளும்தரப்பின கொள்கைக்கு ஏற்ப செயற்படுவது பெரும் பிரச்சினையாகும். வெலிகம பிரதேசசபை தவிசாளர் தனிப்பட்ட பாதுகாப்பு கோரியும் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. அதன் காரணமாகவே அவர் கொடூரதமாகக் கொல்லப்பட்டார்.

இவை தொடர்பில் சபாநாயகரிடம் கூறுவதால் எவ்வித பயனும் இல்லை. சபாநாயகர் என்பவர் ஆளும்தரப்பின் கைப்பாவையாகமாத்திரமேசெயற்படுகின்றார். முன்னர்இருந்தசபாநாயகர்கள்நாடாளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தின் பிரதானியாக எவ்வித பேதமும்இன்றிசுயாதீனமாகச்செயற்பட்டனர். ஆனால்அந்தசம்பிரதாயத்தைப்பாதுகாப்பதற்கு தற்போதைய சபாநாயகர் தவறியுள்ளார். எனவே அவரிடமிருந்து எந்த வகையிலும் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சீரழிக்கும் ஆட்சி

வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் அலுவலகத்தில் பணிநேரத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், இலங்கையில் மீண்டும் ஒருமுறை சட்டத்தின் வீழ்ச்சியையும் அரசின் ஒழுக்கச் சிதைவையும் வெளிப்படுத்தியுள்ளது. இது ஒரு சாதாரண குற்றச் சம்பவமல்ல. இந்த ஆண்டு நடந்த 101–ஆவது ஒப்பந்தக் கொலையாக இது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதைவிடப் பெரிதாகப் பேசப்பட வேண்டியது, இந்தக் கொலையை ஆளும்தரப்பினர் 'அந்த மனிதர் குற்றவாளிதான்' என்கிற வசனத்தால் நியாயப்படுத்த முயன்றது பற்றியதேயாகும்.

ஒரு பிரதேச சபைத் தவிசாளர் – அதுவும் நாட்டின் முக்கியமான சுற்றுலா மையங்களில் ஒன்றான வெலிகமவில் – அலுவலகத்தில் சுட்டுக் கொல்லப்படுவது, சட்டமுறை அரசின் அடித்தளத்தையே உடைக்கும் செயல். இதற்குப் பொதுமக்கள் எழுந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய நிலையில், பொது பாதுகாப்பு அமைச்சர் முதலாவது பிரதிபலிப்பாக 'அந்தத் தலைவர் நல்லவர் இல்லை' என கூறியிருப்பது வெறுமனே அரசியல் அக்கறையின்மையல்ல, அரசின் ஒழுக்கத் தாழ்வின் வெளிப்பாடாகும். அந்தப் பதில் சொல்லிய தருணத்திலேயே இந்த நாட்டில் நீதி என்ற வார்த்தை எவ்வளவு வெறுமையடைந்துவிட்டது என்பதும் தெரிகிறது.

சம்பவத்திற்கு முன்பே அந்தத் தலைவர், தமக்கு பாதுகாப்பு தேவைப்படுவதாகவும், தன்னை மிரட்டும் கும்பல்கள் காத்திருப்பதாகவும், இரண்டு மாதங்களுக்கு முன்பு காவல்துறையிடம் எழுத்து மூலமாக தெரிவித்திருக்கிறார். அதனைக் காவல்துறையும் ஒத்துக்கொள்கிறது. ஆனால் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதன் பொருள் ஒன்று தான் – சட்டம் சிலருக்கு மட்டுமே. மற்றவர்கள் தங்கள் உயிரைப் பாதுகாப்பது அவர்களின் அதிர்ஷ்டத்தின் பொறுப்பு. இது ஒரு ஆட்சியின் பொறுப்பிழந்த நிலை.

இந்தச்சம்பவம்தெற்கின்சுற்றுலாவட்டாரத்தைமட்டுமல்ல, இலங்கையின் முழு பொருளாதாரத்தையும் குலைக்கிறது. உலக நாடுகள் இலங்கை நோக்கி சுற்றுலாப் பயணத்தை மீண்டும் ஆரம்பித்துள்ள வேளையில், ஒரு உள்ளூராட்சி தவிசாளரே அலுவலகத்தில் சுட்டுக் கொல்லப்படுகிறார் என்ற செய்தி வெளிவந்திருப்பதால், எந்த வெளிநாட்டுத் தனிநபரும் அல்லது முதலீட்டாளரும் இங்கே வரத் தயங்குவார்கள் என்பது உறுதி. அமெரிக்க அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ள இலங்கைக்கான பாதுகாப்பு எச்சரிக்கை இத்தகைய நிகழ்வுகளுக்கே ஒரு மறைமுகப் பதிலாகும்.

ஆளும்தரப்பு இதன் பொருளாதார விளைவுகளை உணரவில்லைபோலத் தெரிகிறது. நாட்டின் பொருளாதாரம் இன்னும் தளர்ந்த நிலையிலேயே இருக்கிறது. இதுபோன்ற ஒவ்வொரு சட்டமீறலுமே, மீண்டும் மீண்டும் வளர்ச்சியின் நம்பிக்கையை உடைத்து விடுகிறது. இலங்கை மீண்டும் தன் காலில் நிற்க வேண்டுமெனில், அது உண்மையிலேயே நேர்மையின் அடிப்படையில் மட்டுமே சாத்தியம்; பொய்யான பரப்புரைகளாலும் அரசியல் நடிப்பாலும் அல்ல.

இதற்கிடையில் சமூக பாதுகாப்பு அமைச்சர் உபாலி பன்னிலாகே அளித்த ஒரு புள்ளிவிவரம் அதிர்ச்சிகரமானது. நாட்டின் 52 இலட்சக் குடும்பங்களில் 43 இலட்சம் குடும்பங்கள் 'அஸ்வேசும' நலத்திட்டத்துக்காக விண்ணப்பித்துள்ளன. அதாவது ஒவ்வொரு ஐந்து குடும்பத்திலும் நான்கு குடும்பங்கள் அரசின் உதவியை நாடுகின்றன. அமைச்சர் இதை 'மன வறுமை' எனப் பெயரிட்டார். ஆனால், இவ்வளவு நாள் வறுமையைக் கதையாகக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு இன்று அதையே குற்றமாகச் சாட்டுவது வேடிக்கையாக இல்லையா?

அரசியல்வாதிகள் தேர்தலுக்கு முன் 'மக்களின் தோழர்கள்' எனத் தங்களையும் ஏழைகளாக்கக காட்டினர். ஆனால் சொத்துத் தகவல் சமர்ப்பிக்கும் நேரத்தில் கோடீஸ்வரர்களாகத் தோன்றினர். மக்களிடமிருந்து பெறும் பழக்கத்தை உருவாக்கியது இவர்கள்தான். 'ஜனசவிய', 'சமுர்த்தி', 'அஸ்வெசும' – பெயர்கள் மாறினாலும் நோக்கம் ஒன்றே – வாக்குகளைப் பாதுகாப்பது. இது சமூகப் பாதுகாப்பு அல்ல, அரசியல் பாதுகாப்பு.

இதே ஆளும்தரப்பு ஒரு பக்கம் முந்தைய அரசுத் தலைவர்களின் சலுகைகளைகுறைத்துரூ.95மில்லியன்'சேமித்தது' எனபெருமைப்படுகிறது. ஆனால் மறுபக்கம் இலங்கை விமான நிறுவனம் (SriLankan Airlines) மூலம் ரூ.7.6 பில்லியன் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரே ஆண்டில் ரூ.3.8 பில்லியன் லாபம் பெற்ற நிறுவனம் இவ்வருடம் ரூ.36 பில்லியன் வருவாய் வீழ்ச்சியையும் பெரும் கடனையும் சந்தித்துள்ளது. அதற்கும் ஆளும்தரப்பின் விளக்கம் ஒன்றே – 'சூழ்நிலை காரணம்'. ஆனால் இழப்பின் பின்னால் அரசியல் நியமனங்களும், சொந்த நலன்களும் இருப்பதை அனைவரும் அறிவார்கள்.

அதே அரசு லாபம் ஈட்டும் மின் வாரியத்தை (CEB) 'சீரமைப்பு' என்ற பெயரில் தனியாருக்கு விற்கத் திட்டமிடுகிறது. இழப்பை ஏற்படுத்தும் நிறுவனத்தை வைத்துக்கொண்டு லாபம் தரும் நிறுவனத்தை விற்கும் ஆட்சியின் தந்திரம் இதைவிட வேறு எதுவும் எனக் கூற வேண்டியதில்லை.

நாட்டின் மீட்பு பாதை சுற்றுலாவிலும், உற்பத்தியிலும் உள்ளது. ஆனால் வெலிகமக் கொலை போன்ற நிகழ்வுகள் அந்த நம்பிக்கையையும் சுட்டுக் கொல்கின்றன. ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால் சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்கவேண்டும்; அரசியல் வலிமை பெற்றவர்களுக்கு ஒன்று, சாதாரண மக்களுக்கு ஒன்று என்ற நிலை முடிவுக்கு வரவேண்டும்.

அரசு உண்மையில் சட்டத்தை நிலைநாட்ட விரும்பினால், முதலில் தன் கைகளில் இருந்து அரசிய உள்நோக்கங்களை விடுவிக்கவேண்டும். பொருளாதாரத்தை மீட்க வேண்டுமானால், ஒழுக்கம் அவசியம். 'வெலிகமக் கொலை' என்பது ஒரு மனிதனின் சாவு மட்டுமல்ல – அது சீரழிந்த அரசின் கண்ணாடி. ஒரு உயிரைக் காப்பாற்றத் தவறும் அரசு, மக்களின் வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற முடியாது.

# வான் மீது துப்பாக்கிச் சூடு

ரத்மலானை - கொளுமடம சந்தியில், கட்டளையை மீறி பயணித்த வேன் ஒன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் வேனின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கல்கிசை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தடுப்பிலிருந்த வாகனங்களை விடுவிக்க வர்த்தமானி அறிவிப்பு

சுங்கத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களை விடுவிப்பதற்காக புதிய நிபந்தனைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான அரசுத் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் நேற்று (24) முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்ட போதிலும், 2013ஆம் ஆண்டு இல. 02 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் விதிமுறைகளை மீறி குறித்த வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் இலங்கை சுங்கத்தில் சிக்கியுள்ளன

இந்த புதிய வர்த்தமானி அறிவித்தலின்படி, இறக்குமதி செய்யப்பட்ட நாட்டைத் தவிர வேறு ஒரு நாட்டில் திறக்கப்பட்ட கடனுறுதி ஆவணங்கள் ((உஷலிவிவி-ஞுலிஷ-ளஷ ஸிளீ)) தொடர்பான ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்களை துறைமுகத்தில் இருந்து விடுவிக்க அனுமதி வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த வாகனங்களை விடுவிப்பதற்கும் பதிவு செய்வதற்கும் பல நிபந்தனைகள் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# வானிலை முன்னறிவிப்பு

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புக்கு மேலாக நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு பிரதேசமானது, மேற்கு திசையில் நகர்ந்து ஒரு தாழமுக்கமாக வலுவடைந்து மட்டக்களப்புக்கு கிழக்காக சுமார் 900 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது.

இத்தொகுதி மேற்கு - வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுவதோடு, இன்று ஞாயிற்றுக்கிழமை ஆழமான தாழமுக்கமாக வலுவடையக் கூடும் என்றும் நாளை திங்கட்கிழமை காலை சூறாவளியாக மாற்றமடையக் கூடும் என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதற்கமைய நாளை காலை தென்மேற்கு மற்றும் அண்மையாகவுள்ள மேற்கு - மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்புக்களுக்கு மேலாக இது சூறாவளியாக மாற்றமடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின், தொடர்ந்து அடுத்த 48 மணித்தியாலங்களில் ஆந்திரப்பிரதேச கரையை நோக்கி நகரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழம் குறைந்த கடற்பரப்புக்களில் கடலில் பயணம் செய்வோரும், மீனவ சமூகமும் மறு அறிவித்தல் வரை கடற் பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# பத்தேகம உப தவிசாளர் மீது கொடகந்தவில் தாக்குதல்

பத்தேகம பிரதேச சபையின் உப தவிர் சமன் சி லியனகே தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர் ஒருவரால் வெள்ளிக்கிழமை மாலை இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உப தவிசாளர் தனது மனைவியுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, பத்தேகம, கொடகந்த பகுதியில் வீதியை மறித்து அவர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உப தவிசாளர் தற்போது காலி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன், தாக்குதல் தொடர்பில் பொத்தல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கொல்லப்படும் முன்னர் பாதுகாப்பு கேட்டிருந்தார் வெலிகம தவிசாளர்

## உறுதிப்படுத்தியது பொலிஸ் தலைமையகம்

வெலிகமபிரதேசசபையின்தவிசாளர்லசந்தவிக்கிரமசேகர, தான் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பாகத் தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி பொலிஸ்மா அதிபருக்கு செப்டெம்பர் 6 கடிதம் அனுப்பி வைத்தார் என்பதை பொலிஸ் தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், அதன மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படதாததற்கான காரணத்தை அது தெரிவிக்கவில்லை.

பொலிஸ்மா அதிபரால் அந்தக் கடிதம் தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ;ட பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, உரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெலிகமபிரதேசசபையின்தலைவர்லசந்தவிக்கிரமசேகர, தான் படுகொலை செய்யப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதால், தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியதாக கூறப்படும் கடிதம் தொடர்பில் விளக்கமளித்து பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெலிகமபிரதேசசபையின்தலைவர்லசந்தவிக்கிரமசேகர, ஒக்டோபர் 22 பிரதேச சபை அலுவலக அறையில் அடையாளம் தெரியாத நபரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். அவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும், தேவையான பாதுகாப்பை வழங்குமாறும் கோரி பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய கடிதம் தற்போது பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பகிரப்படுகிறது.

வெலிகமபிரதேசசபையின்தலைவர்லசந்தவிக்கிரமசேகர தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரி செப்டெம்பர் 6 பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக பொலிஸ்மா அதிபர் செப்டெம்பர் 12 தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதன்பின்னர்தென்மாகாணத்துக்குப்பொறுப்பானசிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேற்படி கடிதத்தை மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் மாத்தறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக வெலிகம பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் மிதிகம பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தவிசாளருக்கு ஏன் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பதற்கான காரணம் எதுவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

# பொலிஸாரின் அலட்சியத்தினால்தான் வெலிகம தவிசாளர் கொல்லப்பட்டார்

## மகிந்த ராஜபக்சவின் பேச்சாளர் தெரிவிப்பு

பதிவு செய்யப்பட்ட பாதாளக் குழுக்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது என்றால் ஹரக்கட்டாவுக்கு ஏன் பாதுகாப்பு வழங்கவேண்டும். பொலிஸாரின் அலட்சியத்தால்தான் வெலிகம பிரதேச சபை தவிசாளர் கொல்லப்பட்டாரென முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெலிகம பிரதேச சபை தலைவர் படுகொலை செய்யப்பட்டமை கவலைக்குரியது. பாதாள குழுக்கள் மற்றும் சமூக விரோத செயற்பாட்டாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாமல் கொல்லப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு ஆளும்தரப்பு செயற்படுகிறது.

குற்றவாளிகளின் உயிரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றே சட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது. இதனால்தான் குற்றவாளிகளுக்கும் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அனைவரது உயிரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளும்தரப்புக்கு உண்டு.

வெலிகம பிரதேச சபை தவிசாளர் படுகொலை தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை கண்டிக்கத்தக்கது. பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்றால் ஹரக்கட்டாவுக்கு ஏன் அதிகளவான பாதுகாப்பு வழங்கவேண்டும்?

பாதாள குழுவுக்கும், ஆளும்தரப்புக்கும் இடையில் தொடர்புள்ளதாஎன்றசந்தேகம்காணப்படுகிறது. அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் தான் கொலை செய்யப்படுகிறார்கள். இவ்வாறான நிலை நீடித்தால் நாட்டில் ஜனநாயகம் இல்லாதொழியும் என்றார்.




JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24x7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

# சர்வதேச நாடாளுமன்ற ஒன்றிய கூட்டத்தில் இலங்கை தூதுக்குழு

சுவிட்சர்லாந்தில் ஒக்டோபர் 19 முதல் 23 வரை நடைபெற்ற 151ஆவது சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் கூட்டத்தொடரில், பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தலைமையில் இலங்கை நாடாளுமன்றக் குழு கலந்துகொண்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஓஷானி உமங்கா, சாந்தா பத்மகுமார, மொஹமட் பைசல், ஹேஷா விதானகே மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். இந்தக் கூட்டத்தொடர் 'மனிதாபிமான நெறிமுறைகளை நிலைநிறுத்துதல் மற்றும் நெருக்கடி காலங்களில் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றது.

தொடர்ந்து வரும் உலகளாவிய மனிதாபிமான சவால்களின் பின்னணியில், சர்வதேச மனிதாபிமான சட்டத்தைப் பாதுகாப்பதில், பலதரப்பு உறுதிப்பாடுகளை வலுப்படுத்துவதில், மற்றும் மோதல் மற்றும் நெருக்கடி காலங்களில் பயனுள்ள மனிதாபிமானப் பதில்களை உறுதி செய்வதில் நாடாளுமன்றங்களின் பங்கு குறித்து விவாதிக்க உலகம் முழுவதிலும் இருந்து நூற்றுக்கணக்கான சட்டமியற்றுபவர்களை இந்தக் கூட்டத்தொடர் ஒன்றிணைத்தது.

இந்த மாநாட்டில் இலங்கை சார்பில் உரையாற்றிய பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, மனிதாபிமானப் பதிலளிப்பு மற்றும் நெருக்கடி மேலாண்மையில் இலங்கையின் அனுபவத்தை எடுத்துரைத்தார். 2004 சுனாமியை ஒரு வரையறுக்கும் தருணமாகக் குறிப்பிட்டு, தயார்நிலை, ஒருங்கிணைப்பு மற்றும் மனிதாபிமான நெறிமுறைகளுக்கு இணங்குவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். இது இலங்கையின் மீள்திறனையும், உள்ளூர் மற்றும் சர்வதேச மனிதாபிமான ஒத்துழைப்பின் இன்றியமையாத பங்கையும் அடிக்கோடிட்டுக் காட்டியது என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைசல் 'காலநிலை மற்றும் தூய்மையான காற்றுக்காக மீத்தேனைக் குறைத்தல்: அதற்கு உரிய கவனம் கிடைக்கிறதா?' என்ற தலைப்பிலான செயலமர்வில் கலந்துகொண்டார். தனது கருத்துக்களில், அவர் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான இலங்கையின் வலுவான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

கார்பன் நிகர பூஜ்ஜியம் 2050 வரைபடம் மற்றும் மூலோபாயத் திட்டம், 'கிளீன் சிறீலங்கா' திட்டம் மற்றும் 2050க்குள் கார்பன் நடுநிலைமையை அடைவதற்கான நாட்டின் உறுதிமொழி போன்ற தேசிய முயற்சிகளை அவர் சுட்டிக்காட்டினார். இலங்கையின் சுற்றுச்சூழல் கொள்கைகள் நிலையான அபிவிருத்தி மற்றும் எதிர்காலச் சந்ததியினருக்கான பொறுப்பு பற்றிய நாட்டின் பார்வையைப் பிரதிபலிக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஓஷானி உமங்கா பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றத்தில் கலந்துகொண்டார். அங்கு அவர் 'நாடாளுமன்றங்கள் மற்றும் பாலின சமத்துவம்: சாதனைகள் மற்றும் முன்னோக்கிய பாதை' என்ற அமர்வில் உரையாற்றினார். பாலின சமத்துவம், பெண்கள் அதிகாரமளித்தல் மற்றும் உள்ளடக்கமான நிர்வாகத்தை மேம்படுத்துவதில் இலங்கையின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அவர் கோடிட்டுக் காட்டினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாந்தா பத்மகுமார மற்றும் ஹேஷா விதானகே ஆகியோர் கூட்டத்தொடரின் போது நடைபெற்ற நிரந்தரக் குழுக்கள், கருப்பொருள் குழுக்கள் மற்றும் செயலமர்வுகளின் விவாதங்களுக்கு தீவிரமாகப் பங்களித்தனர். உணவுப் பாதுகாப்பு, புலம்பெயர்வு, காலநிலை நடவடிக்கை மற்றும் நாடாளுமன்ற மேற்பார்வை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்த இலங்கையின் நிலைப்பாடுகளை அவர்கள் பகிர்ந்து கொண்டனர். நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, இந்தக் கூட்டத்தொடருடன் இணைந்து நடைபெற்ற நாடாளுமன்ற செயலாளர்கள் நாயகம் சங்கத்தின் அமர்வுகளிலும் மற்றும் அது தொடர்பான மற்ற கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, இலங்கை தூதுக்குழு, நேபாள தேசிய சபையின் தலைவர் சுவ. நாராயண் பிரசாத் தஹால் தலைமையிலான நேபாள தூதுக்குழுவுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தியது. நாடாளுமன்றப் பரிமாற்றம், கல்வி, சுற்றுலா மற்றும் கலாச்சார உறவுகள் போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்த விவாதங்கள் கவனம் செலுத்தின.

இந்தத் தூதுக்குழு பெலாரஸ் குடியரசின் தேசிய சபை, குடியரசு மன்றத்தின் சர்வதேச விவகாரங்கள் மற்றும் தேசிய பாதுகாப்புக்கான நிலைக்குழுவின் தலைவர் செர்ஜி அலெய்னிக்கையும் சந்தித்தது. இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து, குறிப்பாக கல்வித் துறையில், மருத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்காக இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வாய்ப்புகளில் முக்கியத்துவம் அளித்து விவாதங்கள் மையப்படுத்தப்பட்டன.

இரு தரப்பினரும் நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துதல், உயர்மட்டப் பரிமாற்றங்களை எளிதாக்குதல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துதல் குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி



JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.10.2025இல் வெளியிடப்பெற்றது